**DEPOSITION OF WITNESS**
(Chapter XXIII code of Criminal Procedure)
**IN THE COURT OF THE DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE, GANDARVAKOTTAI**
**CC.NO-233/2019**

**List of Witness LW8 Examined as PW5**

| Name | சசிக்குமார் | Age: | 46 |
|---|---|---|---|
| Father's name | அய்யாவு | Calling: | விவசாயம் |
| Village | முள்ளிகாப்பட்டி | Taluk | கந்தர்வகோட்டை |

Solemly affirmed in accordance with the provisions of Act X of 1873 on the day of 05.08.2025
(எதிரிகள் ஆஜர் )

**முதல் விசாரணை**

நான் தற்போது மேற்கண்ட முகவரியில் வசித்து விவசாயம் செய்து வருகிறேன். ஆஜர் எதிரிகளை எனக்கு தெரியும். கடந்த 2010 ஆம் ஆண்டு கந்தர்வக்கோட்டை - தஞ்சாவூர் சாலையில் உள்ள ARN பேங்கர்ஸ் அடகு கடையில் முதலில் ஒரு 5 பவுன் நகையை அடகு வைத்தேன். அப்போது எதிரி கிருஷ்ணன் கடையில் இருந்தார். அவர் நகைகளை வாங்கிக்கொண்டு ரூ.45,000/- பணம் கொடுத்ததை பெற்றுக்கொண்டேன், அதற்கான ரசீதை கிருஷ்ணன் கொடுத்தார். அவருடன் வேறு ஒரு பையன் இருந்தார், அவர் யார் என்று தெரியவில்லை. பிறகு சுமார் ஒரு வருடம் கழித்து 2 பவுன் நகைகளை ரூ.20,000/- ற்கு மேற்படி அடகு கடையில் அடமானம் வைத்து பணம் பெற்றேன், அப்போதும் எதிரி கிருஷ்ணன் தான் கடையில் இருந்தார். அப்போதும் அவருடன் வேறு ஒரு பையன் இருந்தார், அவர் யார் என்று தெரியவில்லை. போலிசார் என்னை விசாரிக்கவில்லை.

**எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை**

நான் முள்ளிகாப்பட்டி கிராமத்தினை சேர்ந்தவர் என்றால் சரிதான். ARN பேங்கர்ஸ்-ன் உரிமையாளர் யார் என்று எனக்கு தெரியாது என்றால் சரிதான். 1ஆம் எதிரி கிருஷ்ணன் சம்பவத்தின் போது ARN பேங்கர்ஸ் தவிர தனியாக நகை கடை வைத்திருந்தார் என்றால் இல்லை. நான் நகை அடமானம் வைத்த கால கட்டத்தில் வரவு செலவுகளில் எவ்வித பிரச்சினையும் இல்லாமல் நகைகளை அடமானம் வைத்து திருப்பினேன் என்றால் சரிதான். நான் நகைகளை அடமானம் வைத்ததற்கான ரசீதினை போலிசாரிடம் கொடுத்தேனா என்றால் அடமானத்தை மீட்ட போது அடகு கடையில் ஒப்படைத்து விட்டேன், என்னிடம் எந்த ஆவணமும் இல்லை. நான் முதல் விசாரணையில் சொல்லியுள்ள எதிரி கிருஷ்ணனுடன் கடையில் இருந்த மற்றொரு பையன் தற்போது நீதிமன்றத்தில் இல்லை என்றால் சரிதான். எதிரி கிருஷ்ணன் மற்றும் அந்த பையன் தவிர அப்போது வேறு யாரும் கடையில் இல்லை என்றால் சரிதான்.

**சாட்சியின் கையொப்பம்**

**திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல, தட்டச்சருக்கு என்னால் சொல்லப்பட்டு, தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு, அவரால் சரி என ஒப்புக் கொள்ளப்பட்டு, என் கையெழுத்து செய்யப்படுகிறது.**

**ஒப்பம்.என்.சிவபழனி,**
**மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்,**
**கந்தர்வகோட்டை.**

# DEPOSITION OF WITNESS
(Chapter XXIII code of Criminal Procedure)
**IN THE COURT OF THE DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE, GANDARVAKOTTAI**
**CC.NO-233/2019**

**List of Witness LW11 Examined as PW6**

| | | | |
|---|---|---|---|
| Name | சரவணன் | Age: | 50 |
| Father’s name | ராமதாஸ் | Calling: | விவசாயம் |
| Village | துருசுப்பட்டி | Taluk | கந்தர்வகோட்டை |

Solemly affirmed in accordance with the provisions of Act X of 1873 on the day of 05.08.2025

(எதிரிகள் ஆஜர் )

**முதல் விசாரணை**

நான் தற்போது மேற்கண்ட முகவரியில் வசித்து விவசாயம் செய்து வருகிறேன். ஆஜர் எதிரிகளை எனக்கு தெரியும். கடந்த 2010 ஆம் ஆண்டு கந்தர்வக்கோட்டை - தஞ்சாவூர் சாலையில் உள்ள ARN பேங்கர்ஸ் அடகு கடையில் தங்க நகையை ரூ.16,000/-ற்கு அடகு வைத்தேன். அப்போது கடையில் எதிரி கிருஷ்ணன் மற்றும் எதிரி ஜெகதாம்பாள் இருந்தார்கள். பின்னர் 4,5 மாதங்கள் கழித்து மேற்படி நகையினை திருப்பச் சென்றேன். அப்போது எதிரி கிருஷ்ணன் கடையில் இருந்தார். நான் நகையை அடமானம் வைத்த போது அதற்கு ரசீது கொடுத்தார்கள், அடமானத்தை மீட்ட போது ரசீதினை கடையில் ஒப்படைத்து விட்டேன். போலிசார் என்னை விசாரித்தார்கள்.

எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை

எந்த தேதி, மாதம் நான் நகை அடகு வைத்தேன் என்று என்னால் குறிபிட்டு சொல்லமுடியுமா என்றால் தேதி, மாதம் ஞாபகம் இல்லை. நான் நகையை அடகு வைத்ததாக சொல்லும் கால கட்டத்தில் மேற்படி அடகு கடையின் உரிமையாளர் யார் என்ற விபரம் எனக்கு தெரியாது என்றால் சரிதான். எதிரி கிருஷ்ணன் என்பவருக்கு ARN பேங்கர்ஸ் தவிர வேறு நகை கடை இருந்ததா என்றால் எனக்கு தெரியாது. நான் நகை அடமானம் வைத்த கால கட்டத்தில் வரவு செலவுகளில் எவ்வித பிரச்சினையும் இல்லாமல் நகைகளை அடமானம் வைத்து திருப்பினேன் என்றால் சரிதான். முதல் விசாரணையில் கூறியுள்ள நகையை அடமானம் வைப்பதற்கு முன்னதாகவும் நான் எதிரி கிருஷ்ணனிடம் நகைகயை அடமானம் வைத்துள்ளேன் என்றால் சரிதான். வழக்கு சம்பவத்திற்கு முன்பே எதிரி கிருஷ்ணனை எனக்கு சுமார் 15 வருடங்களாக தெரியும். இந்த வழக்கு தவிர நகைகளை அடமானம் வைத்ததில் எதிரி கிருஷ்ணன் மீது வேறு எதுவும் குற்றச்சாட்டுகள் இருந்ததா என்றால் இல்லை. எந்த தேதி மாதம் வருடத்தில் போலிசார் என்னை விசாரித்தார்கள் என்று என்னால் குறிப்பிட்டு சொல்லமுடியாது என்றால் சரிதான். இவ்வழக்கில் போலிசார் என்னை

விசாரிக்கவில்லை என்பது உண்மை தான் என்றால் சரியல்ல, போலிசார் என்னை விசாரித்தார்கள்.

சாட்சியின் கையொப்பம்

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல, தட்டச்சருக்கு என்னால் சொல்லப்பட்டு, தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு, அவரால் சரி என ஒப்புக் கொள்ளப்பட்டு, என் கையெழுத்து செய்யப்படுகிறது.

ஒப்பம்.என்.சிவபழனி,
மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்,
கந்தர்வகோட்டை.